2008 நவம்பர் 12]

சார் பதிவாளர் அலுவலகத்திற்கு, வரும் நிதி ஆண்டில் முன்னுரிமை கொடுத்து, அரசு சார்பில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமையிடமாக விளங்கக்கூடிய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகத்தைச் சொந்தக் கட்டடத்திற்கு மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, வாடகைக் கட்டடத்தில் இயங்கக்கூடிய சார் பதிவாளர் அலுவலகங்களை ஆண்டுதோறும் படிப்படியாக புதிய கட்டடத்தில், சொந்தக் கட்டடமாக மாற்றக்கூடிய பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மொத்தமுள்ள 558 சார் பதிவாளர் அலுவலகங்களில் 244 சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டு 15 கட்டடங்களுக்கும், 2007-2008 ஆம் ஆண்டு 20 புதிய கட்டடங்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். வருங்காலத்தில், நிதி நிலைமையைப் பொறுத்து படிப்படியாக புதிய கட்டடங்களாக மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

விடுதி வசதி

***30706—திரு. செ. சின்னச்சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மருங்காபுரியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ / மாணவியர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதியில், மருங்காபுரியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதி தொடங்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மருங்காபுரி தொகுதியில் மருங்காபுரி என்ற கிராமத்திலே அரசு மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இங்கே மருங்காபுரி ஊராட்சி, அடைக்கம்பட்டி ஊராட்சி, தாழம்பாடி ஊராட்சி, முத்தாள்வார்பட்டி ஊராட்சி, டி. எடையாப்பட்டி ஊராட்சி, பளுவஞ்சி ஊராட்சி, கவுண்டன்பட்டி ஊராட்சி என்று 7 ஊராட்சிகளை உள்ளடக்கி 37 கிராமங்களை உள்ளடக்குகின்ற பகுதிக்கு ஒரே ஒரு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே 740 மாணவ மாணவிகள் பயின்று கொண்டிருக்கிறார்கள். 16 வகுப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. சுற்றிலும் மலையால் சூழப்பட்டு, நடுவே அந்த ஊர் இருக்கிறது. மலையைக் கடந்து மாணவ மாணவிகள் பள்ளிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே படிக்கிற மாணவ மாணவிகளெல்லாம் ஏழ்மையான விவசாயக் கூலித் தொழிலாளி குடும்பங்களிலே பிறந்திருக்கின்றவர்கள். எனவே, அரசு இதைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு மருங்காபுரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைத்துத் தர வேண்டுமென தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதிக்கு உட்பட்டு 8 மாணவ மாணவியர் விடுதிகள் இருக்கின்றன. இந்தப் பகுதி மலை சார்ந்த பகுதி என்பதையும் நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிலும் அதுதான் இருக்கிறது.

2008 நவம்பர் 12]

எதிர்காலத்திலே நிதிநிலைக்கு ஏற்றாற்போல அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சின்னச்சாமி.

திரு. செ. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருங்காபுரி தொகுதி, மணப்பாறை தொகுதியாக மாறவிருக்கிறது. எனவே, அந்த மக்கள் சோகத்திலே இருக்கிற சூழ்நிலையிலே அந்த ஊருக்கு மாணவியர் விடுதியை வருகின்ற நிதியாண்டிலாவது அரசு தந்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கின்றேன்.

அதைப்போல, சேவல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கும், பன்னாங்கொம்பு அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் மாணவர் விடுதியை அரசு வழங்கிட வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்திலே நிதி நிலைக்கு ஏற்றாற்போல அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அரசு செயல்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

முற்பகல் 10-10

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் நிதியாண்டிலே பெண்ணாகரம் தொகுதி, செல்லமுடி கிராமத்திலே மேல்நிலைப் பள்ளிக்கென்று ஒரு மாணவர் விடுதி ஒதுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில், அந்த விடுதியை பெண்கள் விடுதியாக மாற்றிட வேண்டுமென்று அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், இதுநாள் வரை அந்த விடுதி திறக்கப்படவில்லை. அது எப்போது திறக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பரிந்துரை வந்திருக்கும் என்று சொன்னால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதியிலே, மருதமுத்தூரில் ஒரு கிராமப்புறப் பள்ளி இருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 1,200 மாணவர்கள் படிக்கின்றார்கள். அதன் பக்கத்தில் எந்த பெரிய ஊரும் கிடையாது. அங்கு வெளியூர் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியே கிடையாது. ஆனால், நான் கடந்த ஆண்டிலும், அதற்கு முந்தைய ஆண்டிலும் இக்கோரிக்கையினை வைத்திருக்கிறேன். கடந்த ஆண்டில் நிச்சயமாகத் தந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. எப்படியோ விட்டுப்போய்விட்டது. எனவே, இந்த ஆண்டு கண்டிப்பாக அந்தப் பள்ளிக்கு மாணவ-மாணவியர் விடுதியைத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் பலமுறை இதுகுறித்து வற்புறுத்தியிருக்கிறார்கள். வரும் நிதியாண்டிலே கட்டாயம் இதனை அரசு கனிவோடு பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

டாக்டர் க. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம் கல்வி மாவட்டமாகப் புகழ்பெற்று விளங்குகிறது. அந்த மாவட்டத்திலே இருக்கின்ற கபிலர்மலை தொகுதியிலே பத்துக்கு மேற்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவ-மாணவியர் விடுதியும் இல்லை என்பதைத் தங்கள்மூலமாகத்

2008 நவம்பர் 12]

தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டு அல்லது வரும் ஆண்டிலே பிற்படுத்தப்பட்ட மாணவர் அல்லது மாணவியர் விடுதியை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அரசு, அதைப் பரிசீலித்து அந்தப் பகுதியில் உள்ள மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்றவாறு ஒதுக்குகின்ற நேரத்தில், நாமக்கல் மாவட்டத்திலே உள்ள அந்தப் பகுதிக்கும் அரசு முன்னுரிமை வழங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17, திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

சீரமைப்பு

***38355—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டம், பூந்தமல்லியில் அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவிலின் திருக்குளத்தைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, பூந்தமல்லி அருள்மிகு திருக்கச்சிநம்பிகள் மற்றும் வரதராஜப்பெருமாள் திருக்கோவில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவிலாகும். இத்திருக்கோவில் திருக்குளம் கடந்த 2002 ஆம் ஆண்டு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டில் பெய்த கனமழை காரணமாக